**தலைப்பு 151 – கடற்றொழில் அமைச்சு.**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 151 – கடற்றொழில் அமைச்சின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கடற்றொழில் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 20 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூன் 12 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடற்றொழில் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| கடந்த ஆண்டிற்குரிய அறிக்கையுடனான தொடர்பு | அமுல்படுத்தப்படாதிருந்த பரிந்துரைகள் | இந்த அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|
| 1.6.6 | கணக்காய்விற்கு தேவையான விபரங்கள் சமர்ப்பிக்கப்படாமை | 1.6.4(அ) |

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

**(அ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணம் ''பீ'' கணக்கு தொடர்பான இணக்கக்கூற்றின் பிரகாரம் 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 743,452 ஆகும். அந்த நிலுவைக் கடன் மீதிகளில் ரூபா 629,842 அதாவது 84 சதவீதம் 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அறவிடப்படாது காணப்படுவதுடன் மீளாய்வாண்டின் போது அந்த கடன் மீதியை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது. | 2023.01.01 இல் உள்ளவாறு ரூபா 1,095,937 ஆன நிலுவை கடன் மீதி அரச நிதி சுற்றறிக்கை 01/2020 இன் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்ததன் காரணமாக 2023.12.31 இல் உள்ளவாறு ரூபா 743,452 வரை குறைவடைந்துள்ளது. அந்தக் கடன் மீதியில் ரூபா 629,842 தொகை 20 வருட காலம் வீச்சில் இருந்து நிலுவையாக உள்ளது. எனினும் அரச நிதி சுற்றறிக்கை 01/2020 இன் ஆலோசனையைப் பின்பற்றி அந்த கடன் மீதியையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவைக் கடன் மீதி அறவிடப்படல் வேண்டும். |

**(ஆ) வைப்புக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2015 யூலை 23 ஆம் திகதிய இலக்கம் 07/2015 என்ற ஓய்வூதியத் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு மாதத்தின் பங்களிப்புப் பணம் அடுத்துவரும் மாதத்தின் 10 ஆந் திகதிக்கு முன்னர் அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்கு அனுப்பு வதற்கு நடவடிக்கை எடுத்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக இருந்த போதிலும் 2022 நவம்பர் மாதம் முதல் 2023 ஏப்ரல் மாதம் வரையான கடற்றொழில் இராஜாங்க அமைச்சரின் பிரத்தியேக பதவியணியினரிடம் இருந்து அறவிடப்பட்ட ரூபா 545,256 ஆன அரசாங்க சேவை சேமலாப நிதிய பங்களிப்பு மற்றும் 2023 சனவரி முதல் திசம்பர் மாதம் வரையான கடற்றொழில் இராஜாங்க அமைச்சரின் பிரத்தியேக பதவியணியினரிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 816,123 ஆன அரசாங்க சேவை சேமலாப நிதியப் பங்களிப்பு நியதிச் சட்ட கொடுப்பனவிற்காக தற்காலிக நிறுத்திவைத்தல் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதிலும் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய உத்தியோகத்தரின் அரசாங்க சேவை சேமலாப நிதியத்தில் பதிவு செய்யாமையின் காரணமாக 6000-0-0-18-0-151 என்ற நியதிச்சட்டக் கொடுப்பனவிற்காக தற்காலிக நிறுத்திவைத்தல் கணக்கில் ரூபா 545,256 தொகையும், 6000-0-0-18-0-45-151 என்ற நியதிச்சட்ட கொடுப்பனவிற்கான தற்காலிக நிறுத்திவைத்தல் வைப்புக் கணக்கில் ரூபா 816,123 தொகையும் பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. அரசாங்க சேவை சேமலாப நிதியத்தில் பதிவு செய்யுமாறு அந்த உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | 2015 யூலை 23 ஆம் திகதிய இலக்கம் 07/2015 என்ற ஓய்வூதிய திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ii) | நிதிப்பிரமாணம் 571(3) இன் பிரகாரம் 2-5 வருடங்களுக்கிடையிலான கூட்டுமொத்தமான ரூபா 167,195,801 ஆன வைப்பு மீதியும், 05 வருடங்களை விஞ்சிய ரூபா 31,910,669 ஆன வைப்பு மீதியும் தீர்த்து வைப்பதற்கோ அல்லது அரசாங்கத்தின் வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்காமல் மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | 02 வருடங்களை விஞ்சிய பொது வைப்புக்கணக்கில் காணப்படுகின்ற மீதியை தொடர்ந்தும் வைத்துக்கொள்வதற்கான காரணம் அந்த கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 571(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | தல ரல சவிய 2023 உலக மீன்பிடித் தினத்திற்காக பல்வேறு தனியார் நிறுவனங்களினால் கடற்றொழில் அமைச்சிற்கு ரூபா 2,920,000 நிதி உதவி வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 2,313,791 தொகை மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டு மிகுதி ரூபா 606,209 தொகை இலக்கம் 6000-0-0-13-0-40 என்ற மூன்றாம் தரப்பினருக்கு மீண்டும் திருத்துவதற்காக தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்ட வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப் பட்டிருந்ததுடன் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தல ரல சவிய 2023 உலக மீன்பிடித் தினத்திற்காக பல்வேறு நிறுவனங்களில் இருந்தும் கடற்றொழில் அமைச்சிற்கு கிடைத்த பணத்தில் மேலும் எஞ்சி யுள்ள ரூபா 606,209 தொகை அந்த பணிக்காக சமர்ப்பிக்கப்பட்ட சகல பட்டியல்களுக்கும் செலுத்தி பூர்த்தி செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்திய பின்னர் எதிர்காலத்தில் அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொது வைப்புக் கணக்கில் எஞ்சியுள்ள பணம் அரச வருமானத்தில் செலவு வைக்கப்படல் வேண்டும். |

**(இ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட திரண்ட நிதியல்லாத சொத்துக்கள் (SA 82) கூற்றின் பிரகாரம் 2022 திசம்பர் 31 இல் உள்ளவாறு நிதியல்லாச் சொத்துக்களின் மீதி ரூபா 721,915,845 ஆக இருந்த போதிலும் 2023 இன் நிதிக் கூற்றுக் களுடன் சமர்ப்பிக்கப்பட்ட திரண்ட நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் 2023 சனவரி 01 ஆம் திகதி மீதி ரூபா 701,459,049 ஆக காண்பிக்கப்பட்டமையால் ரூபா 20,456,796 வேறுபாடு காணப்பட்டது. | அலுவலக கட்டிடம் (611/201) இன் கீழ் அமைச்சி கட்டிடத்தில் மேலதிக 03 மாடிகளை நிர்மாணிப்பதற்கு உரியதாக ஆகஸ்ட் மாதம் வரை செலுத்தும் உப விடயமாக சிகாஸ் சொத்து முறைமையில் உள்ளடக்குவதற்குப் பதிலாக முன்னைய ஆண்டுக்குரிய 03 மாடிகளை நிர்மாணித்தலின் அதிகரிப்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டதுடன் பின்னர் இந்த செலவினம் 2023 ஆம் ஆண்டில் கொள்வனவாக கருதி ஆண்டின் ஆரம்ப மீதியில் அகற்றப்பட்டு மீளாய்வாண்டின் கொள்வனவாக நிதியல்லா சொத்துக்கள் கூற்றில் காண்பிக் கப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட ஆரம்ப மீதி மற்றும் ஆண்டில் சொத்துக்கள் கைப்பற்றல் களின் கூற்று மீதியின் வேறுபாட்டிற்கு காரணமாக இருந்தது. | கடந்த ஆண்டின் இறுதி மீதி சரியாக மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2023 ஆம் ஆண்டில் செலவின விடய இலக்கம் 151-1-2-0-2104 இன் கீழ் ரூபா 27,525,864 கட்டிடம் மற்றும் நிர்மாண மூலதனச் சொத்துக்கள் கைப்பெற்றல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் திரண்ட நிதியல்லா சொத்துக்கள் அறிக்கையில் (SA 82) 2023 ஆம் ஆண்டின் கொள்வனவுகள் ரூபா 45,207,775 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 17,681,911 வேறுபாடு காணப்பட்டது. | -மேற்படி- | ஆண்டில் மேற்கொள்ளப் பட்ட மூலதனச் சொத்துக்கள் கைப்பற்றல்கள் சரியாக நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (iii) | 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு கடற்றொழில் அமைச்சிற்கு சொந்தமான ரூபா 994,254,549 ஆன நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான விரிவான பட்டோலை கணக்காய்விற்கு வழங்கப்படாதிருந்ததுடன் சகல நிலையான சொத்துக்களினதும் மெய்மை ஆய்வு அறிக்கையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையினால் அந்த சொத்துக்களைப் பரீட்சிப்பதற்கோ அல்லது இந்த சொத்துக்கள் பௌதீக ரீதியில் நிறுவனத்தில் காணப்படுகின்றதா என்பதைப் பரீட்சிப்பதற்கோ முடியாதிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | அரசாங்கத்தின் சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் இருப்பிற்காக விரிவான பட்டோலை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**(ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச்செல்லப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| **(i) பிணைப் பதிவேடு** | | |
| நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணைவைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கிய பிணைப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கூறப்பட்ட பதிவேட்டை நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பேணிச்செல்லுமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பிணைப்பதிவேடு தயாரிக்கப்படல் வேண்டும். |
| **(ii) மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு** | | |
| நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | மேற்கூறப்பட்ட பதிவேட்டை நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பேணிச்செல்லுமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் மின்சார உபகரணங்கள் பதிவேடு தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) புத்தகங்களின் பெயர்வழிகாட்டி | | | |
| | நிதிப்பிரமாணம் 454(3) இன் பிரகாரம் புத்தகங்களின் பெயர் பெயர்வழிகாட்டி பேணிச்செல்லப்பட்டிருக்க வில்லை. | மேற்கூறப்பட்ட பதிவேட்டை நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பேணிச்செல்லுமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் புத்தகங்களின் பெயர்வழிகாட்டி தயாரிக்கப்படல் வேண்டும். |

**(உ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டிற்காக அமைச்சிற்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 638,016,000 தொகை தேசிய நீரியல் வழங்கல் அபிவிருத்தி அதிகார சபைக்கும் ரூபா 486,393,000 தொகை தேசிய நீரியல் வழங்கல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மை நிறுவனத்திற்கும் ரூபா 689,535,000 தொகை இலங்கை கடற்றொழில் துறைமுகத்திற்கும் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினத்திற்கான கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த 03 அரச நிறுவனங்களுக்காக அமைச்சினால் கூட்டுமொத்தமாக ரூபா 1,813,944,000 கட்டுநிதி 2023 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்தது. எனினும் ஒவ்வொரு செலவின விடயத்திலும் உள்ள உப செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட கட்டுநிதியின் அளவு, கோரப்பட்ட கட்டுநிதியின் அளவு, அவை செலவிடப்பட்ட முறை தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய செலவின அறிக்கை, தகவல்கள் மற்றும் ஒவ்வொரு செயற்திட்டங்களினதும் செயல் முன்னேற்றம் தொடர்பாக தனித்தனியாக இனங் காணக்கூடிய பிரகாரம் தயாரிக்கப்பட்ட தகவல் அல்லது அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 1,813,944,000 செலவினங்களின் சரியான தன்மையினை கணக்காய்வின் போது உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சினால் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபன விடயங்களுக்குரிய கொள்கை, நிகழ்ச்சித்திட்டம் மற்றும் செய்திட்ட வழங்கல், அமுல்படுத்துதல் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த நிதி ஏற்பாடுகளில் மீண்டெழும் செலவினம் குறைக்கப்பட்ட பின்னர் மிகுதி மூலதன நிதி ஏற்பாடு ரூபா 213.718 மில்லியனுக்குரிய பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீடுகள் இந்த அமைச்சில் திட்டமிடல் பிரிவு மற்றும் அபிவிருத்திப் பிரிவு ஊடாக காலாண்டு ரீதியில் மேற்கொள்ளப்படுகின்றது. விஷேட சந்தர்ப்பங்களின் போது தேவையான ஆலோசனைகள் விநியோகிக்கப்படுவதுடன் காலாண்டு ரீதியில் மதிப்பீடுகளின் தகவல்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் பிரதியுடன் பொதுத் திறைசேரிக்கும் அனுப்பப்படுகின்றது. | அமைச்சின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற இந்த 03 அரச நிறுவனங் களுக்கு வழங்கப்பட்ட நிதிகளுக்கு உரிய மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவின அறிக்கை தனித்தனியாக தயாரிக்க வேண்டியிருந்ததுடன் பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீடுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நன்னீர் மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்காக ஏற்படுகின்ற செலவின விடயம் மற்றும் 2023 ஆம் ஆண்டில் கடப்பாடுகளைத் தீர்த்துவைப்பதற்காக மேலதிக நிதி ஏற்பாடு வழங்கப் பட்டிருந்த போதிலும் அதிபல் 44 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. பொது மக்கள் சீன குடியரசின் மானியமாக மீன்பிடி கப்பல்களுக்காக வழங்கப்பட்ட மண்ணெண்ணை மானியத்திற்காக இந்த எரிபொருள் மீன்பிடி கப்பல்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய போக்குவரத்து மற்றும் பிணைமுறி கட்டணத்திற்காக கருதப்பட்டிருந்த குரைநிரப்பு மதிப்பீடு நிதி ஏற்பாட்டில் 49 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ஆரம்ப பாதீட்டு மதிப்பீட்டை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிதிஏற்பாடு உச்ச அளவில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நன்னீர் மீன் குஞ்சுகளை வாழ்க்கை சுழற்சியின் பிரகாரம் மீன் குஞ்சுகளை உருவாக்குவதற்கு இனப்பெருக்கம் செய்த பின்னர் 03 மாதங்கள் எடுக்கின்றது. எனினும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தவதற்காக இலங்கை தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபைக்கு நிதி ஏற்பாடு 2023 நவம்பர் மாதம் வழங்கப்பட்டிருந்ததுடன் 44 சதவீத செயல் முன்னேற்றம் ஒன்று மாத்திரம் பெறப்பட்டிருந்தது. அவ்வாறே பொது மக்கள் சீனக் குடியரசின் மானியத்தின் கீழ் மீனவர்களுக்காக வழங்கப்பட்ட மண்ணெண்ணை மானியம் 2023 ஆம் ஆண்டில முழுமையாக பகிர்ந்தளித்தலைப் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் மண்ணெண்ணை பகிர்ந்தளித்தலைப் பூர்த்தி செய்ய முடியாதிருந்தமையால் எஞ்சியிருந்த அளவு 2024 ஆம் ஆண்டில் பகிர்ந்து பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இல் காண்பிக்கப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் சரியாகவும் பொருத்தமாகவும் மதிப்பீடுகள் தயாரித்து அமைச்சின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலக்கம் 151-2-4-2-1509-0-11 என்ற செலவின விடயத்தின் கீழ் தேசிய நீர்வழங்கல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மை நிறுவனத்திற்காக ஏனைய செயற்பாட்டு செலவினத்தின் கீழ் வருடாந்த பாதீட்டின் மூலம் ரூபா 100,000,000 நிதி ஏற்பாடு ஒதுக்கப் பட்டிருந்ததுடன் ரூபா 28,000,000 தொகை நிதிப் பிரமாணம் 66 இன் மாற்றல் மூலம் மேலதிக நிதி ஏற்பாடாக | தேசிய நீர் வழங்கல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மை நிறுவனத்தின் மின்சாரம் மற்றும் இயந்திர உபகரண பராமரிப்பிற்காக ரூபா 06 மில்லியன் தொகை சமுர்த்திக்கா கடற்படை கப்பலின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 22 மில்லியனும் ஆன வகையில் ரூபா 28 மில்லியன் நிதி ஏற்பாடொன்று நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் மாற்றப்பட்டிருந்த | நிதிப்பிரமாணம் 50 இல் காண்பிக்கப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் சரியாகவும் பொருத்தமாகவும் மதிப்பீடுகள் தயாரித்து அமைச்சின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| வழங்கப்பட்டிருந்த போதிலும் 2023 திசம்பர் 31 ஆந் திகதி வரையில் நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் மாற்றப்பட்ட ரூபா 28,000,000 தொகையையும் உள்ளடக்கி ரூபா 31,517,000 தொகை அதாவது 28 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | போதிலும் அந்த நிதி ஏற்பாடு ஆண்டின் இறுதியின் போலே மாற்றப்பட்டமையினால் அந்த நிதி ஏற்பாட்டிற்காக கட்டுநிதி பெற்றுக்கொள்ளல் வசதியீனமாக இருந்தது. அதனால் இந்த செலவின விடயத்தின் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடற்றொழில் அமைச்சினால் பேணிச்செல்லப்படுகின்ற பொறுப்புக்கள் பதிவேட்டின் பிரகாரம் 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு பொறுப்புக்களின் மீதி ரூபா 2,005,845 ஆக இருந்த போதிலும் SA 92 திறைசேரி திரண்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் அறிக்கையின் பிரகாரம் அத்திகதியில் பொறுப்புக்களின் மீதி ரூபா 2,605,845 ஆனமையால் ரூபா 600,000 வேறுபாடு காணப்பட்டது. | கணக்காய்வு ஐயவினாவில் 2023 ஆம் ஆண்டிற்குரிய ஏனைய நிறுவனங்களினால் அறிக்கையிடப்பட்ட கடப்பாடுகள் / பொறுப்புக்களே காண்பிக்கப்பட்டிருந்தது. அவை அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அறிவித்து எதிர்காலத்தில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அமைச்சினால் பேணிச்செல்லப்படு கின்ற பொறுப்புக்கள் கூற்றில் காணப்படுகின்ற பொறுப்புக்கள் SA 92 திறைசேரி திரண்ட கடப்பாடுகள் பொறுப்புக்கள் அறிக்கையில் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கடற்றொழில் அமைச்சினால் 2023 திசம்பர் 28 ஆம் திகதி திருத்தப்பட்ட வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட செயல் முன்னேற்ற அறிக்கையின் படி அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டியதாக ரூபா 185,910,000 ஆன பட்டியல் உள்ளடக்கியிருந்ததாக குறிப்பிடப் பட்டிருந்த போதிலும் அந்தப் பட்டியல்களின் பெறுமதி அமைச்சின் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் கீழ் இனங்காணப்பட்டிருக்கவில்லை | சுட்டிக்காட்டப்பட்டுள்ள பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிப்பதற்கு தவறொன்றினால் கைவிடப்பட்டிருந்ததுடன் அவ்வாறில்லாமல் கண்காணித்துக் கொள்ளுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | அமைச்சின் 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய பட்டியல் கள் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் கீழ் அறிக்கையிடப்படல் வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

**அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் | | பெறுமதி ரூபா | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | இணங்காமைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 104(1) | 1,808,262 | நாரஹேன்பிட்ட, முகந்திரம் ஈ.பீ. தாபரே மாவத்தை இலக்கம் 18/146 B என்ற இடத்தில் அமைக்கப்பட்டிருந்த கடற்றொழில் அமைச்சின் செயலாளர் பதவிக்காக ஒதுக்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ இல்லத்திற்காக கடற்றொழில் அமைச்சின் பொருட் பதிவேட்டில் வழங்கப்பட்டிருந்த சகல அரசாங்கத்தின் பொருட் பதிவேட்டுப் பொருட்களும் தொலைந்து போயிருந்ததாக 2023 இன் வருடாந்த பொருள் மெய்மை ஆய்வு அறிக்கை மூலம் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் கட்டிடத்தில் பொருத்தப்பட்டிருந்த கதவு யன்னல் பூட்டுக்கள் மற்றும் கட்டிட இணைப்புக்களும் கழற்றி எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த உத்தியோகபூர்வ இல்லத்தில் காணப்பட்ட அரசாங்கத்தின் பொருட் பதிவேட்டுப் பொருட்கள் யாவும் தொலைந்து போய் இருந்தமை | நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் ஆரம்ப விசாணைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்குரிய நாரஹேன்பிட்ட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கு பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப்பிரமாணம் 104(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | மற்றும் அரசாங்கத்திற்கு கட்டிடத்திற்கு இழப்பு ஏற்பட்டிருந்தமையினால் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்த ரூபா 1,808,262 நட்டம் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அதற்கு பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங்கண்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | நிதிப்பிரமாணம் 880 | | அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணைக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணை வைக்கவேண்டியிருந்த போதும் கடற்றொழில் அமைச்சின் உரிய உத்தியோகத்தர்கள் பிணைவைத்திருக்க வில்லை. | பிணைவைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் பிணைவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனவிதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 13.6 ஆம் உப பிரிவு | 40,000 | பன்னிரெண்டு மாத காலப்பகுதியில் விழா முற்பணத் தொகை ஒரு தடவை மாத்திரம் வழங்க வேண்டியிருந்த போதிலும் அமைச்சினால் 04 உத்தியோகத்தர்களுக்கு 2023 ஆம் ஆண்டில் இரண்டு தடவை ரூபா 10,000 வீதம் விழா முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. | விழா முற்பணம் முழுமையாக அறவிடப்பட்ட பின்னர் 04 உத்தியோகத்தர்களுக்கு அந்த ஆண்டின் போது தவறொன்றினால் மீண்டும் விழா முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறில்லாமல் கண்காணித்துக்கொள்ளுமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனவிதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 13.6 ஆம் உப பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | இலக்கம் 05/2008 என்ற 2008 பெப்ரவரி 06 ஆம் திகதிய அரச | | கடற்றொழில் அமைச்சினால் 2023 ஆம் ஆண்டிற்காக பிரஜைகள் / சேவை நலனாளிகள் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டிருக்க | 2024 ஆம் ஆண்டிற்காக சேவை நலனாளிகள் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டுள்ளது. | 05/2008 என்ற 2008 பெப்ரவரி 06 ஆம் திகதிய அரச நிருவாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை | வில்லை. | | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | இலக்கம் 02/2018 என்ற 2018 சனவரி 24 ஆம் திகதிய அரச நிருவாக சுற்றறிக்கை | கடற்றொழில் அமைச்சினால் 2023 ஆம் ஆண்டிற்காக மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2024 ஆம் ஆண்டிற்காக மனிதவளத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | இலக்கம் 02/2018 என்ற 2018 சனவரி 24 ஆம் திகதிய அரச நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vi) | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.12 | பெறுமதிசேர் வரியை மேவுகை செய்வதற்காக நிதி செலுத்தப்பட்ட பின்னர் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அந்த கொடுப்பனவுகள் தொடர்பான விபரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவித்து அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும அமைச்சினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.12 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.12 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.4 வங்கி கணக்கு செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 இன் நிதிக் கூற்றுக்களின் இணைப்பு (viii) மற்றும் 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு நிலைமை அறிக்கையில் இலக்கம் 7042730 என்ற வங்கி கணக்கு தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இலக்கம் 7042730 கணக்கு மூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு திறைசேரி செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகத்தின் 2024 மே 03 ஆந் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. | 2023 ஆம் ஆண்டில் செயற்பாட்டில் காணப்பட்ட உத்தியோகபூர்வ வங்கிகக் கணக்காக இருந்தமையால் 2023 இன் நிதிக் கூற்றுக்களில் இணைப்பு (viii) மற்றும் 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமை அறிக்கையில் இந்த வங்கிக் கணக்கு தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் உள்ளடக்கப்பட்ட கடற்றொழில் பிரிவின் உட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கான 03 செயற்பாடுகளுக்காக ரூபா 6,360,000 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டு 100 சதவீத செயலாற்றல் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அதற்குரிய பௌதீக செயலாற்றல் 75 சதவீதத்தைவிட குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | இந்த தகவல்கள் உரிய நிறுவனங்களிலிருந்து கோரப்பட்டுள்ளதுடன் கிடைத்தவுடன் அனுப்பப்படும். | செயலாற்றலை பெற்றுக்கொள்ள முடியுமான வகையில் செயற்திட்டங்களைத் திட்டமிடல் மற்றும் மேற்பார்வை செய்தல் வேண்டும். |
| (ஆ) | தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபைக்கு 2023 ஆம் ஆண்டின் கடற்றொழில் அமைச்சு செலவினத் தலைப்பின் கீழ் ரூபா 200,000,000 தொகையொன்று நிதி ஏற்பாடாக திறைசேரியால் வழங்கப்பட்டிருந்தது. அமைச்சினால் அரசாங்கத்தின் கணக்காய்விற்கு வழங்கப்பட்ட வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் செயல் முன்னேற்ற அறிக்கையில் நிதி ஏற்பாடு வழங்குதல் ரூபா 300,000,000 ஆக குறிப்பிடப்பட்டு செயல் முன்னேற்றம் தயாரிக்கப்பட்டதன் காரணமாக பொதுத்திறைசேரியால் வழங்கப்பட்ட நிதிஏற்பாடு தொகை செலவிடப்பட்ட முறையில் செயல் முன்னேற்றத்தை பரீட்சிக்க முடியாதிருந்தது. | 2023 இன் பாதீட்டு நிதி ஏற்பாட்டிற்கு மேலதிகமாக விஷேட அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் மேலதிக நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. | அமைச்சின் நிதி ஏற்பாடுகளில் அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த நிதிக்காக தனித்தனியான செயல் முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | கடற்றொழில் அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் 04 அபிவிருத்தி செலவின விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 196,685,000 நிதி ஏற்பாடு செலவிடப்பட்ட முறையைக் காண்பிக்கின்ற விரிவான செயல் முன்னேற்றம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திட்டத்தின் செயல் முன்னேற்ற அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டில் ரூபா 7.05 மில்லியன் ஒருவெல்ல பத்திரிகைக்காகவும், ரூபா 73.27 மில்லியன் நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபையின் 2002 ஆம் ஆண்டிற்குரிய கையிலுள்ள பட்டியல்களைச் செலுத்துவதற்கும் மற்றும் 2.9 மில்லியன் நீர்கொழும்பு பிரதேசத்தில் சிறிய அளவிலான மீன்பிடியாளர்களுக்கு 25 மிதவைகளை வழங்குவதற்கும் பணம் செலுத்தப்பட்டிருந்தது. மிகுதி நிதி ஏற்பாடு ஹிக்கடுவ மீனவர் வீடுகளை பழுதுபார்ப்பதற்குரிய விலை முரண்களுக்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சிற்கும் நிதிப்பிரமாணம் 208 இன் கீழ் நிதி ஏற்பாடு வழங்குவதற்கு அனுப்பப்பட்டிருந்தது. | வருடாந்த செயல் நடவடிக் கைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளில் நிதிசார் மற்றும் பௌதீக செயல் முன்னேற்றம் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையில் உள்ளடக்குதல் வேண்டும். |

### 3.2 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ)(i) மீன்பிடித் துறைமுகம் மற்றும் நங்கூரத் தளம் நிர்மாணித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் தொடர்பான 2013 யூலை 04 ஆம் திகதிய இலக்கம் 1/5/1/1/அமா.சங்/2013-09 என்ற அமைச்சரவைக் குறிப்பிற்காக வழங்கப்பட்டிருந்த அங்கீகாரத்தின் பிரகாரம் காலி மாவட்டத்திற்குரிய தைக்காவெல கடல் பிரதேசத்தில் நங்கூரத் தளம் நிர்மாணிப்பதற்காக தொகுதி 01 மற்றும் 02 ஆக கேள்வி கோரப்பட்டு தொகுதி 01 இற்கு ரூபா 132,602,410 ஒப்பந்தப் பெறுமதியிலும், தொகுதி 02 இனை ரூபா 113,198,400 தொகையான ஒப்பந்தப் பெறுமதிக்கும் ஒரு வருடத்திற்குள் நிர்மாண ஒப்பந்தங்களைப் பூர்த்தி செய்யும் அடிப்படையில் 02 தொகுதிகளுக்காகவும் 2014 செப்டெம்பர் 14 ஆம் திகதி ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒப்பந்தக் கம்பனியால் 02 தொகுதிகளுக்காகவும் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அமைச்சால் 2014 செப்டெம்பர் 29 ஆம் திகதி ரூபா 49,160,162 வேலை ஆரம்பித்தல் முற்பணம் 02 தொகுதிகளுக்காகவும் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் இந்த ஒப்பந்தத்திற்காக நிர்மாண அனுமதிப்பத்திர் காணப்படாமையினால் நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு கம்பனி நிறுத்தவேண்டி ஏற்பட்டிருந்ததுடன் முற்பணத் தொகை மீள அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த செயற்திட்டம் 2013 ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் மூலம் அமுல்படுத்துவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்டம் ஆகும். இந்த செயற்திட்டம் 2013 – 2015 இற்கிடையிலான காலத்தில் மத்திய கால பாதீட்டு அட்டவணையில் பூர்த்தி செய்ய வேண்டியிருந்ததாக நிதி அமைச்சின் அவதானிப்பில் காண் பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த செயற்திட்டம் மிகவும் விரைவாக ஆரம்பித்து 2015 ஆம் ஆண்டு தொடங்கு முன் பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. அந்த அங்கீகாரம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | நிர்மாணத் திற்கான சகல முறையான அங்கீகாரம் பெற்றுக் கொண்ட பின்னர் பணத்தை செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | இந்த நங்கூரத் தளம் நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தின் ஆலோசனை நடவடிக்கைகளை மேற் கொண்ட நிறுவனம் தொடர்பாக அமைச்சினால் பேணிச் செல்லப்படுகின்ற கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அந்த ஆலோசனை கம்பனியுடன் முறையான பிரகாரம் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதா எனவும் அந்த உடன்படிக்கை செல்லுபடியானதாக உள்ளதா எனவும் கணக்காய்வில் உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந் தது. எனினும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்த பணம் செலுத்தும் ஆவணங்களின் பிரகாரம் இந்த ஆலோசனைக் கம்பனிக்கு 02 தொகுதிகளுக்காக ரூபா 4,377,234 ஆலோசனைக் கட்டணமொன்று செலுத்தப்பட்டிருந்தது. நங்கூரத் தளம் நிர்மாணிப்பதற்காக ஆரம்ப சுற்றாடல் அறிக்கை (IEE) பெற்றுக்கொள்வதற்காக ரூபா 443,975 தொகை 2015 திசம்பர் 31 ஆந் திகதி இந்த ஆலோசனைக் கம்பனிக்கு செலுத்தப் பட்டிருந்த போதிலும் அதன் ஆரம்ப சுற்றாடல் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | ஆலோசனைக் கம்பனியை நியமித்துக் கொள்வதற்கு உரிய கோவை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 3.3 நிதி ஏற்பாடு விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயல்முன்னேற்றத்தைப் பெறாத செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 செப்டெம்பர் 01 ஆம் திகதி பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரான திகதியில் இருந்து களமெட்டிய மீன்பிடித் துறைமுகத்தில் பொருத்தப்பட்டிருந்த 39 கெமராக்கள் செயலிழந்த நிலையில் காணப்பட்டமை 2023 செப்டெம்பர் 04 ஆம் திகதி களமெற்றிய மீன்பிடித் துறைமுகத்தின் முகாமையாளரால் முகாமைத்துவத் தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு | உரிய ஒப்பந்தகாரரால் இந்த செயலிழந்த கெமரா நாளது வரையாக்கப்பட்டுள்ளது | ஒரு உத்தரவாதக் காலத்தில் ஏற்படுகின்ற பிழைகளைச் சரிசெய்து கொள்வதற்காக அமைச்சு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அறிவிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த நிறுவனத்தால் பொருத்தப்பட்ட கெமராக்களுக்காக 02 வருடம் உத்தரவாத காலத்துடன் காணப்பட்ட மையால் அது தொடர்பாக கவனம் செலுத்தி கெமரா முறைமையை சிறந்த நிலைக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

### 3.4 உள்நாட்டு நிதியங்களில் இருந்து அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ரெக்கவ நங்கூரத் தளம் அபிவிருத்தி செயற்திட்டம் ரூபா 311,482,215 (வற் இன்றி) தொகையில் 365 நாட்களில் வேலைகளை பூர்த்தி செய்யும் அடிப்படையில் ஒப்பந்தகாரர்களுக்கு கையளிக்கப்பட்டதுடன் 2020 ஒக்டோபர் 20 ஆம் திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டின் ஒக்டோபர் 19 ஆம் திகதி வேலை பூர்த்தி செய்வதற்கு அமைச்சுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும் குறித்துரைத்த திகதியில் வேலைகள் பூர்த்தி செய்வதற்கு முடியாமையினால் 04 சந்தர்ப்பங்களின் போது ஒப்பந்தக்காலம் நீடிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 365 நாட்களினால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய செயற்திட்டம் மேலும் 384 நாட்களினால் நீடிக்கப்பட்ட பின்னர் 2022 ஆம் ஆண்டின் நவம்பர் 08 ஆம் திகதி வேலை பூர்த்தி செய்து அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த செயற்திட்டத் திற்காக அமைச்சினால் ரூபா 3,398,637 தொகையொன்று தாமத வட்டி மற்றும் ரூபா 464,637 தாமத வட்டியின் அடிப்படையில் பெறுமதி சேர் வரியாக கூட்டுமொத்தமாக ரூபா 3,863,274 தொகை ஒப்பந்தக் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் போது இந்த ஒப்பந்த நிறுவனம் மற்றும் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட ஒப்பந்த தரவுகளுக்கு முன்னுரிமையான சட்டங்கள் விதிகளாக கருதப்பட்டதுடன் அதற்கு மேலதிகமான விடயங்களுக்காக இலங்கை ஒப்பந்த நிருவாக நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட கேள்வி ஆவணம் 02 (SBD 02) இன் பிரகாரம் அமுல் படுத்தப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்குரிய பட்டியல்களுக்கு செலுத்துவதற்காக குறித்துரைத்த காலத்தில் கணக்குப் பிரிவிற்கு உறுதிச்சீட்டுக்கள் அனுப்பப்பட்ட போதும் 2022 ஆம் ஆண்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாக பொதுத் திறைசேரியிலிருந்து உரிய செயற்திட்டங்களுக்கு செலுத்துவதற்காக வரையறுக்கப்பட்ட கட்டுநிதி அளவே விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக தீர்த்துவைத்தல் உரிய காலத்தில் மேற்கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் அதன் படி உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த நிலைமையைக் குறித்துக்கொள்ளுமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | தாமத வட்டி செலுத்தாத வகையில் கொடுப்பனவுகள் திட்டமிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கடற்றொழில் அமைச்சினால் அமுல்படுத்தப்பட்ட 2023 இன் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளக்கப்பட்ட சகல நிர்மாண செயற்திட்டங்களும் குறித்துரைத்த உடன்படிக்கைகால எல்லையில் நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் 309 நாட்கள் முதல் 541 நாட்கள் வரையான கால வீச்சி வரை தினங்கள் நீடிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக செயற்திட்டத்தின் மூலம் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் மீனவர்களுக்கு விரைவாக வழங்குவதற்கு முடியாதிருந்தது. | இந்த செயற்திட்டம் நாட்டில் காணப்பட்ட தொற்றுநோய் நிலைமையின் கீழ் நாளாந்த பணிகள் அங்கீகரித்தல் போன்ற எதிர்பார்க்கப்படாத விடயங்களினால் இவ்வாறான நிலைமை ஏற்பட்டிருந்தது. | மீனவர்களுக்கு விரைவாக நலன்களை பெறும் வகையில் நிர்மாண செயற்திட்டங்களை திட்டமிடல் வேண்டும். |
| (இ) | மீன்பிடி அமைச்சினால் பிரதான 04 நிர்மாண செயற்திட்டங்களை பூர்த்தி செய்யும் காலம் நீடிக்கப்பட்டிருந்ததுடன் நிர்மாண ஒப்பந்தகாரரால் கொடுப்பனவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களுக்காக பணம் செலுத்துதல் தாமதமடைந்ததன் காரணமாக கணிசமான தாமத வட்டி செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறான மேலதிக தாமத வட்டி செலவினத்திற்காகவும் அரசாங்கத்தின் நிதி ஏற்பாட்டை பயன்படுத்த வேண்டி ஏற்பட்டதன் மூலம் அரசாங்கத்திற்கு<br><br>கணிசமான நிதி ரீதியான நட்டம் ஏற்பட்டிருந்தது. 2023 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் கடற்றொழில் அமைச்சால் மீன்பிடி துறைமுக நிர்மாணிக்கும் 04 செயற்திட்டங்களுக்காக நிர்மாண ஒப்பந்தகாரர்கள் இருவருக்கு ரூபா 206,295,210 தொகை தாமத வட்டியாக செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 20,029,039 தாமத வட்டித் தொகையும் மேலும் செலுத்துவதற்கு | 2022.04.26 ஆம் திகதிய 03/2022 சுற்றறிக்கையின் படி செயற்திட்டத்திற்காக வழங்கப்படுகின்ற நிதி ஏற்பாடு வரையறைக்கு உட்பட்டிருந்ததுடன் திறைசேரியால் கட்டுநிதி விநியோகித்தல் வரையறுக்கப்பட்டதன் காரணமாக செயற்திட்டத்திற்காக பணம் செலுத்துதல் தாமதமடைந்திருந்ததுடன் இந்த பட்டியல்கள் கணக்குப் பிரிவிற்கு அனுப்புதல் சரியாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தாமத வட்டி செலுத்தாத வகையில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல் மற்றும் கொடுப்பனவுகள் திட்டமிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செலுத்தப்பட்ட தாமத வட்டிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 226,324,249 ஆகும். | | |
| (ஈ) | செல்லமங்கர மீன்பிடித் துறைமுக அபிவிருத்தி செயற்திட்டத்தின் ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக் கப்பட்ட பட்டியல்களுக்காக அமைச்சினால் நிதி செலுத்தாமையின் காரணமாக தாமத வட்டிக் கட்டணம் ரூபா 36,351,185 தொடர்பாக ஒப்பந்தகாரரால் பிணக்குகள் தீர்க்கும் சபைக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்கா ரூபா 960,000 தொகை அமைச்சினால் சட்ட செலவினத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. அதன் பின்னர் அமைச்சினால் இலங்கை தேசிய பிணக்குகள் தீர்க்கும் நிலையத்திற்கு முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதற்காக ரூபா 354,500 தொகை சட்ட செலவினத்திற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | செல்லமங்கர மீன்பிடித் துறைமுக செயற்திட்டத்தின் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டிற்காக பொதுத் திறைசேரியின் மூலம் கட்டுநிதி வழங்கும் போது ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக பட்டியல்களுக்கு கொடுப்பனவும் தாமதமடைந்திருந் ததுடன் அந்தப் பட்டியல்கள் குறித்துரைத்த காலத்தின் பிரகாரம் கணக்குப் பிரிவிற்கு அனுப்பப்பட்டிருந்தது. எனினும் கட்டுநிதி கிடைக்காமையினால் கொடுப்பனவுகள் தாமத மடைந்திருந்தது. | நிர்மாணத்திற்கான கொடுப்பனவு செய்யும் போது தாமதக் கட்டணம் ஏற்படாத வகையில் கொடுப்பனவுகள் திட்டமிடப்படல் வேண்டும். |

### 3.5 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் (உ) உப பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையான பிரகாரம் குறித்துரைத்த கால எல்லையில் சகல கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளிக்க வேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டிற்காக விநியோகிக்கப்பட்ட 04 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களில் மேலும் பதிலளிப்பதற்கு 04 ஐய வினாக்களுக்கான காணப்படுவதுடன் அதற்காகவும் பதிலை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறித்துரைத்த திகதியில் கணக்காய்வு ஐயவினாக்களுக்காக பதிலளிக்கப்படல் வேண்டும். |

## .6 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சு அலுவலகக் கட்டிடத்தில் மேலதிகமாக 03 மாடிகளை நிர்மாணிப்பதற்காக 2016 நவம்பர் 23 ஆம் திகதிய அமப/16/2333/725/044 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 242,511,455 தொகையில் 2018 யூன் 12 ஆம் திகதி ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2018 யூன் 26 ஆந் திகதி ஒப்பந்தக் கம்பனி வேலைகளை ஆரம்பித்திருந்ததுடன் அது 365 நாட்களில் அதாவது 2019 யூன் 25 ஆந் திகதி வேலைகள் பூர்த்தி செய்வதற்கு காணப்பட்ட போதும் ஒப்பந்தகாரர்கள் எதிர்பார்க்கப்பட்ட செயல் நடவடிக்கைகளை செய்யாமையின் காரணமாக 2019 செப்டெம்பர் 06 ஆம் திகதி அமைச்சினால் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தகாரரை கறுப்பு பட்டியலில் இடுவதற்கு உரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. இந்த மேலதிக மூன்று மாடிகளையும் நிர்மாணிக்கும் பணிகளை மேற்கொள்ளும் போது ஒப்பந்தகாரர்கள் கவனத்தில் கொள்ளாமல் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொண்டமை யினால் அமைச்சின் மாடிகளுக்குள் மழைநீர் கசிவு ஏற்பட்டு ரூபா 10,061,054 தொகை அரசாங்கத்தின் சொத்துக்களுக்கு இழப்பு ஏற்பட்டிருந்து. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இந்த இழப்பு ஏற்பட்டு 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் ஏற்பட் டிருந்த | 2019.09.10 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்ட பிரகாரம் இழப்பை கணிப்பிடுதல் மற்றும் நட்டத்தை அறவிடுவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்ட போதிலும் உரிய தகவல்கள் கடற்றொழில் மற்றும் நீரியல் வள திணைக்களம், கரையோரப் பாதுகாப்பு திணைக்களத்தை உள்ளடக்கிய பல்வேறு தரப்புக்களினால் குறித்துரைத்த பிரகாரம் கிடைக்காமையின் காரணமாக அது மேற்கொள்ளப்படவில்லை. பின்னர் அது தொடர்பாக 2023.06.26 ஆம் திகதி குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் அந்த அறிக்கை 2023.11.05 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட் டிருந்தது. 2024.02.26 ஆந் திகதி நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | அரசாங்கத்தின் சொத்துக்களுக்கு ஏற்பட்டிருந்த இழப்பை விரைவாக பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அரசாங்களின் சொத்துக்களின் இழப்பை அறவிடுவதற்கும் இவ்வாறான இழப்பை தடுப்பதற்குமாக அமைச்சினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | கடற்றொழில் அமைச்சின் மொழிபெயர்ப்பாளர் பதவியில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தரால் 2022 செப்டெம்பர் 07 ஆம் திகதி முதல் கடமைகளுக்காக அறிக்கையிடப்படாதிருந்ததுடன் 2023 மார்ச் 27 ஆந் திகதி கடற்றொழில் அமைச்சினால் பதவியை விட்டுச் செல்லும் அறிவித்தல் விநியோகிக்கப்பட்டிருந்தது. மேலும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களினாலும் 2023 திசம்பர் 06 ஆந் திகதி முதல் கடமைக்கு அறிக்கையிடப்படாதிருந்ததுடன் 2024 பெப்ரவரி 02 ஆம் திகதி பதவியை விட்டு செல்லும் அறிவித்தல் விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சினால் மொழிபெயர்ப்பு உத்தியோகத்தருக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட சம்பளம் மற்றும் படிகள், ஒரு மாதத்திற்கான சம்பளம், 112 மாதங்கள் கட்டாய சேவைக் காலத்தின் கீழ் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தமையால் அதற்காக செலுத்த வேண்டிய தண்டப்பணமான ரூபா 563,818 மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட சம்பளம் மற்றும் படிகள் ஒரு கலண்டர் மாதச் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 71,297.50 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 635,115 பெறுமதியான தொகையொன்று அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய இருந்தது. | உடன்படிக்கை செய்யப்பட்ட தொகையை அறவிடுவதற்காக சட்டமா அதிபரிடம் விசாரிக்கப்பட்டுள்ளதுடன் சம்பளத்தை அறவிடுவதற்குரிய கடிதம் பிரதேச செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. | உடன்படிக்கை செய்யப்பட்ட பணம் மற்றும் மேலதிகமாக செலுத்தப்பட்ட சம்பளத்தை விரைவாக அரசாங்கத் திற்கு அறவிடல் வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிறைவேற்று பதவிகளில் 09 இற்குரிய வெற்றிடங்கள் 09 மற்றும் இரண்டாம் நிலையில் 02 பதவிகளுக்குரிய 32 வெற்றிடங்கள் காணப்பட்டமை கடற்றொழில் அமைச்சின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு இடையூறாக இருந்தது. | அரச நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது வெற்றிடமான பதவிகளுக்கு சில உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். | அமைச்சின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு இடையூறாக இருக்கக்கூடிய வெற்றிடயங்களை நிரப்புதல் வேண்டும். |
| (ஆ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற பதவியணியினர் தொடர்பான விபரங்களின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திலிருந்து அங்கீகாரம் பெறப்படாதிருக்குமாயின் முகாமைத்துவ உதவியாளர், சாரதி மற்றும் அலுவலக உதவியாளர் பதவிகளில் 04 உத்தியோகத்தர்களுக்கு 2023 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | இந்த நான்கு பதவிகளுக்காக 2019.09.18 ஆந் திகதி இலக்கம் 29/2019 என்ற அரச நிருவாக சுற்றறிக்கை பிரகாரம் நியமனம் வழங்கப்பட்டுள்ளதுடன் உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. எனினும் தற்போது இருவரும் சேவையிலிருந்து விலகிச் சென்றுள்ளனர். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் தொடர்பாக ஏதாவது திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பங்களின் போது அதற்காக முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய இலக்கம் 2/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டின் கடற்றொழில் அமைச்சின் செயலாற்றல் அறிக்கையை ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவ பந்தியின் கீழ் இரண்டாம் நிலை சேவைத் தொகுதியில் 32 உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காணப்படுகின்றமை குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் அமைச்சிற்கு நியமிக்கப்பட்ட இரண்டாம் நிலை சேவைத் | பதிலளிக்கப்படவில்லை. | வெற்றிடங்கள் காணப்படுகின்ற பதவியணி யனர் ஏனைய நிறுவனங்களில் மிகைப் பதவியணியினர் மூலம் மேவுகை செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகுதிக்குரிய 48 பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அமைச்சின் கீழ் காணப்படுகின்ற ஏனைய நிறுவனங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் போது செயலாற்றல் அறிக்கை ஊழியர் பற்றாக்குறை காண்பிக்கப்பட்டமை கணக்காய்வின் போது பிரச்சினைக் குரியதாக இருந்தது. | | |
| (ஈ) | பாதீட்டு உதவியாளர், திட்டமிடல் உதவியாளர் மற்றும் திட்டமிடல் உதவியாளர் என்ற இரண்டாம் நிலையில் 03 பதவிகளில் 05 வெற்றிடங்கள் காணப்படுகின்றமை அங்கீகரிக்கப் பட்ட ஊழியர் எண்ணிக்கை தொடர்பான விபரங்களில் காண்பிக்கப்பட்ட போதிலும் அந்த பதவிகளில் இருக்கின்ற உத்தியோகத்தர்களை முறையான பிரகாரம் ஏனைய சேவைக ளுக்கு உள்ளீர்ப்புச் செய்த பின்னர் அந்த பதவி வெற்றிடங்களாக இருக்கும் போது அந்த பதவிகள் கலைக்கப்படுவதாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களில் உறுதிப்படுத் தப்பட்ட போதும் 2023 திசம்பர் 31 ஆம் திகதி அந்த பதவிகள் கலைக்கப்படாமல் வெற்றிட பதவிகளாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | அந்த பதவிகளைக் கலைப்பதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியி னரைத் திருத்தவதற்காக தேவையான திருத்தங்கள் மேற்கொண்டு பதவியணியினர் அங்கீகரித்துக்கொள்ளப்பட ல் வேண்டும். |